## நலிவுற்ற பிரிவினர்களின் நலம் மற்றும் குறிப்பாக பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர்

### (இனம் - 27)

01. 1991 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 558.59 இலட்சமாகும். அதில் ஆதி திராவிடர் மக்கள் தொகை 107.12 இலட்சமும், பழங்குடியினர் மக்கள் தொகை 5.74 இலட்சமும். கணக்குப்படி பார்த்தமையில் முறையே 19.18 விழுக்காடும், 1.03 விழுக்காடும் ஆக அமைகின்றன. ஆதிதிராவிடர்.பழங்குடியினரை மேம்படுத்தி வளர்ச்சியடைய கல்வி வாய்ப்புகளுக்கு மாநில அரசானது கணக்கற்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. படிப்புதவித் தொகை, கல்விக் கடன், சீருடைகள், பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்குதல், தொடக்கநிலை, இடைநிலை, மேல் இடைநிலை ஆகிய நிலைகளில் தனித்த பள்ளிகளை நடத்துதல். உள்ளுறைப்பள்ளிகள், சிறப்புப் பயிற்சி வசதிகள், இலவசமாக விடுதிகளை நடத்துதல் ஆகிய பலவித நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் தற்பொழுது நடைமுறையில் உள்ளன. இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர் இனத்தை மேம்படுத்துவதற்காகச் செய்றபட்டுவரும் பன்முகப்படுத்தப்பட்ட திட்ட நடவடிக்கைகளிலும் பல்வேறு பொதுத் துறைகளின் கீழ் அதாவது கல்வி, வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு, தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு, ஊரக வளர்ச்சி முதலியனவற்றில் செயற்படுத்தப்பெறும் கூடுதல் திட்டங்களிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினரால் செயற்படுத்தப்படும் திட்டங்களினாலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆதாயம் பெறுகின்றனர்.

02. 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும் சம நீதிப் பெற சட்டமியற்றப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இச்சட்டம், தமிழ்நாட்டில் முறையாகவும், பயனுள்ளதாகவும் நிர்வகிக்கப்பட 25 நடமாடும் கண்காணிப்புப் குழுக்கள், 4 சிறப்பு குற்றவியல் அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் 8 குற்ற வழக்குத் தொடர்வு கண்காணிப்புக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

03. தமிழ்நாட்டில், 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டமானது தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டுவருகிறது. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறுவாழ்வு பெறுவதற்கு, பின்வரும் பயன்கள் விரிவாக்கப்பட்டுள்ளன : 1. வீட்டு மனைகள் மற்றும் பயிரிடும் நிலங்கள் வழங்குதல். 2. கறவை மாடுகள், கோழி வளர்ப்பு, உழவு மாடுகள் முதலியவற்றை வழங்குதல். 3. செயற்கை வைரம்பட்டை தீட்டுதல், கல் உடைக்கும் கருவிகள் வேளாண்மைக் கருவிகள் முதலியன வழங்குதல்.

04. 2.38 இலட்சம் மாணவர்கள் 1017 ஆதி திராவிடர்கள் பள்ளிகளிலும், 224 பழங்குடியினர் பள்ளிகளும் படிக்கின்றனர். கல்வித் துறை, உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் தனியார் மேலாண்மை முதலியவற்றால் நடத்தப்படும் பள்ளிகளில் ஆதி திராவிடர் குழந்தைகள் 25.17 இலட்சமும், பழங்குடியினர் குழந்தைகள் 1.12 இலட்சமும் பயிலுகின்றனர். பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் மாணவர்களுக்கு விடுதி வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

தற்போது ஆதி திராவிடர் வகுப்பின மாணவர்களுக்கு 968 விடுதிகளும், பழங்குடியினர் மாணவர்களுக்கு 26 விடுதிகளும் உள்ளன.

05. 1988–89 ஆம் ஆண்டுவரை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகமானது 78,673 வீடுகளை ஆதி திராவிடர்களுக்கு கட்டியுள்ளது. 1989 லிருந்து 1996 வரை 2,56,528 வீடுகள் ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்ட நிதியுதவியைக் கொண்டு ஊரக வளர்ச்சித் துறையால் கட்டப்பட்டுள்ளது.

06. 15.2.1974 அன்று துவக்கப்பட்ட ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கமானது, ஆதி திராவிடர் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப்படுத்துவதாகும். கழகத்தின் முக்கிய

நோக்கங்கள் என்னவென்றால்: (i) தமிழ்நாடு மாநிலத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல்; (ii) ஆதி திராவிடர்களுக்கான விடுதிகள், பள்ளிகள் சமூகக் கூடங்கள், பால்வாடிகள் முதலியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டித் தருதல். (iii) ஆதி திராவிடர்கள் பயனடைவதற்காகப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தி ஏழ்மை நிலைக்கு மேல் அவர்களை உயர்த்துதல்; (iv) ஆதி திராவிடர்களை மேம்படுத்துவதற்காக எந்தவொரு குறிப்பிட்ட பணி தொடர்பிலும் அரசால் அவ்வப்போது கழகத்திடம் ஒப்படைக்கப்பெறும் பணிகளை மேற்கொள்ளுதல்

## மாநில நிதி ஆதரவு

07. மாநில அரசானது சென்ற மூன்றாண்டு காலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| திட்டம் | 1994-95 ஆம் ஆண்டு உள்ளபடியானச் செலவு | 1995-96 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு மதிப்பீடு | 1996-97 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (மொத்தம்) அவற்றில் | 18259.79 | 22066.26 | 24757.36 |
| (அ) ஆதி திராவிடர் | | | |
| 1. கல்வி | 7205.39 | 8944.62 | 9585.57 |
| 2. பொருளாதார வளர்ச்சி | 103.40 | 175.54 | 177.84 |
| 3. நல்வாழ்வு மற்றும் வீட்டுவசதி | 3931.38 | 6594.85 | 7040.60 |
| 4. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உள்ளடங்கிய பகுதித் திட்டத்தின்படி சிறப்பு மைய அரசு உதவி. | 3816.24 | 3174.85 | 4616.83 |
| (ஆ) பழங்குடியினர் | | | |
| 1. கல்வி | 519.03 | 598.92 | 625.56 |
| 2. பொருளாதார வளர்ச்சி | 3.44 | 4.46 | 4.59 |
| 3. நல்வாழ்வு மற்றும் வீட்டுவசதி | 42.20 | 41.63 | 28.44 |
| 4. பழங்குடியினர் பகுதி உபத் திட்டம் | 734.12 | 693.13 | 694.00 |
| (இ) இதரச் செலவினங்கள் (ஒன்று சேர்ந்து) | 1904.59 | 1838.26 | 1983.93 |

08. 1993–94 ஆம் ஆண்டு காலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் நலனுக்கு ரூ.102.65 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊராட்சி அமைப்புகள் :**

09. கல்வி, வீட்டு வசதிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் அளிக்கப்பெறுவதற்கு மேற்கொள்ளப்பெற்ற முயற்சிகளன்றியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்கள் அதிக அளவில் மேம்பாடு அடைய அளவிலும் தரத்திலும் சேர்ந்து மேலும் செய்யப்பட வேண்டியவை அதிகம் உள்ளன. இப்பிரிவு வகுப்பினர்களின் பிரச்சினைகள் சிக்கல்களானவை என்பதால் நிருவாக இயந்திரம் மட்டும் போதாது என்பதுடன் இதற்குப் ஊராட்சி அமைப்புகளின் முழு ஆதரவும் முயற்சியும் இருந்தாலன்றி சமூக நீதி இலக்கை தகுந்த காலவரம்பிற்குள் எய்துவதற்கான நம்பிக்கை ஏற்படாது. மாவட்ட நிலையில் மொத்தச் செயலாக்களவு திட்டமிடுதலும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய நிலைகளிலும் திட்டச் செயலாக்கம் இருக்க வேண்டும். மாவட்ட அளவில் ஏற்படக்கூடிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் தேவைகள் மாவட்டத்திட்டமிடும் குழுவின் வாயிலாக அதாவது இயக்ககம், கழகம் ஆகிய இரு அமைப்புகளான மாநில அளவிலான அரசமைப்பு எனும் இயந்திரங்களால் தீட்டப்பெறும் திட்டங்களில் எதிரொலிக்க வேண்டும்.

10. அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் 73 மற்றும் 74, ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள் பொறுப்புகள் ஆகியவற்றைத் தெரிவிப்பதுடன் அதிலுள்ள 29 இனங்களுக்கான இனம் 27 ஆனது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகும். ஆதி திராவிடர், பழங்குடியினர், அடிமைத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்குப் பயனுள்ள நலப் பணிகளையும் மறுவாழ்வு பணிகளையும் அளிக்கும் நோக்குடன் மாநிலத் திட்டகுழு பிரிவானது ஊராட்சி அமைப்புகளின் 3படி நிலை அமைப்புகளிடையே பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஒப்படைப்பதற்குப் பரிந்துரைக்கிறது.

### I. ஊராட்சி

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி | (i) | அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் எழுத்தறிவு மற்றும் மேம்பாடு கல்வி நிலைகளை மதிப்பீடு செய்து புள்ளி விவரங்களை ஆவணமாகத் தொகுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல். |
| | | (ii) | பல்வேறு ஊக்கங்களை அளித்து கல்வியை இடையில் நிறுத்தி விடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கைகளில் உதவுதல். |
| | | (iii) | பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வுத் தேவைகளை அளிக்க ஊரக அளவில் செயற்பட்டு வரும் திட்டங்களுக்கு உதவுதல். |
| | | (iv) | குறைந்த விழுக்காடு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்தல். |
| | | (v) | மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதை, உறுதி செய்தல், பழங்குடியினர் மாணவி களுக்கிடையே குறைந்த எழுத்தறிவு பெற்றவர்களிடையே எழுத்தறிவில் முன்னேற்றமடையச் செய்தல். |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | (vi) | பள்ளிகள், உள்ளுறை பள்ளிகள் போன்றவற்றிற்குத் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிவறைகள், குடிநீர் வழங்குதல், வகுப்பறைகள், அறைகலன்கள், கற்பிப்பு உதவிப் பொருள்கள், அறிவியல் பரிசோதனைச் சாலைகள், தளவாடங்கள் ஆகிய அடிப்படைச் சாதனங்களையும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிக்க ஏற்பாடு செய்ய உறுதியளித்தல். |
| | (vii) | வாழ்க்கை தொழில் பயிற்சியளிப்பதற்காக ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களைக் கண்டறிந்து அப்பட்டியலை ஊராட்சி ஒன்றியத்திற்கும், உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல். |
| | (viii) | பள்ளிகள் அல்லது விடுதிகளைத் திறத்தல், பள்ளிகளை மேல்நிலைத் தகுதி பெறச் செய்தல், பள்ளி மற்றும் விடுதி கட்டிடங்கள் கட்டுதல் போன்ற தேவைகளைக் கண்டறிதல், ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருக்கு அதனைத் தெரிவித்தல். |
| 2. வீட்டு வசதிகள் மற்றும் வீட்டு மனைகளுக்கு நிலத்தைக் கையகப்படுத்துதல் | (i) | வீட்டு மனைகள், வீடுகள் ஒதுக்கீடு செய்வது, ஆதி திராவிடர் குடியிருப் பிடங்களுக்குத் தேவையான அடிப்படைச் சாதனங்களுக்கு வழிவகை செய்தல் தொடர்பில் ஏற்கனவே உள்ள நிலையில் இருப்புக் கணக்கு எடுத்தல். இதில் ஏற்படும் தேவையின் இடைவெளி குறித்துக் கண்டறிந்து அத்தகவலை ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல். |
| | (ii) | ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு நீர் வழங்குதல், துப்புரவு, மின்சாரம், சாலைகள் அமைத்தல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்ய உறுதியளித்தல். |
| | (iii) | வீட்டுமனைகளுக்கான இடங்களைக் கண்டறிவதிலும் அரசு ஆதரவு / ஊக்க உதவித்தொகை வழங்கும் வீடுகளைக் கட்டுவதிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல். |
| 3. பொருளாதார வளர்ச்சி | (i) | ஊக்குதவித் தொகை மற்றும் கடன் பெறுவதற்காக பயனாளர்களைத் தேர்ந்தெடுக்க உதவுதல். |
| | (ii) | சுய வேலைவாய்ப்பு, தனிநபர் தொழில் முனைவோர் மற்றும் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான உதவியின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே குடும்பங்களைக் கண்டறிவதில் உதவுதல். |
| | (iii) | சிறப்புக் கூறுகளடங்கிய திட்டத்தின் கீழ் பகுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் உதவுதல், ஆதி திராவிடர் |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | | பயனடைவதற்காக இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்தல்; திட்டங்களின் முன்னேற்றத்தைக் காலமுறைப்படி மறு ஆய்வு செய்தல். |
| 4. தீண்டாமையை ஒழித்தல் மற்றும் | (i) | பின்வரும் வேறுபாடு காணும் ஆதி திராவிடர் மற்றும் நடைமுறை வழக்கத்தில் தகுந்த பழங்குடியினர் எதிரான அட்டூழி நடவடிக்கைக்கு காவல்துறைக்கு புகார் யங்களை அடக்குதல் செய்ய வேண்டும். பொது குடிநீர் ஆதாரம், சுடுகாடு, கிராம தேநீரகத்தில் தனியாக பாத்திரங்களை பயன்படுத்துதல், வழிபாட்டுத் தலங்களில் செல்லுதல், முடிதிருத்துபவர், சலவை யாளர் பணிகளைச் செய்ய மறுத்தல், திருமண ஊர்வலம் செல்ல தடைசெய்தல். |
| | (ii) | 1955ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டு பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் ஆகியவற்றை வட்டார மொழியில் மொழி பெயர்த்து அப்படிகளைப் பகிர்ந்தளிக்க உதவுதல். |
| | (iii) | தீண்டாமையை ஒழிப்பதற்கு சமூக ஆதரவைத் திரட்டுதல். |
| | (iv) | நில உச்சவரம்பு விதிகளின்கீழ் தா.வ. / தா.ப.யினருக்கு வழங்கப்பட்ட நிலங்கள் உடைமையாக்கப் பெறுவதை உறுதி செய்ய உதவுதல். |
| | (v) | மதிப்பற்ற மரபுத் தொழில்களான பிணத்தை எடுத்துச் செல்லல், முரசு அடித்தல், புதைக் குழியைத் தோண்டுதல் முதலியவற்றை ஆதி திராவிடர்களை வற்புறுத்திச் செய்யாமல் இருப்பதை உறுதி செய்தல். |
| | (vi) | சிறு வனவிளைப் பொருள்கள், விறகு முதலியன திரட்டு பவர்களான பழங்குடியினரை வன அலுவலர்கள் தொந்தரவு செய்யாமலிருப்பதை உறுதிப்படுத்த உதவுதல். |
| 5. கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வு | (i) | கிராமத்திலுள்ள கொத்தடிமை தொழிலாளர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற் கொள்ளுதல். |
| | (ii) | 1976ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம் கட்டாயமாக்கப்படுவதை உறுதி செய்தல். |
| 6. துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர் களுக்கான மறுவாழ்வு | (i) | தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் துப்புரவாளர்கள் அவரைச் சார்ந்துள்ள வர்களைக் கண்டறிய ஆய்வு நடவடிக்கை களை மேற்கொள்ளுதல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | (ii) மனித கழிவுகளைத் தாமே சுமந்து அகன்றுகின்ற பணியிலிருந்து அவர்களை விடுவிப்பதிலும். பல்வேறு வகையான நடவடிக்கைகளுக்கு அவர்களுக்கு நிதியுதவியுடன் மறுவாழ்வு அளித்தலை உறதிப்படுத்துவதிலும் உதவுதல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. ஆதிதிராவிடர் மற்றும் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாடு | (i) கிராம ஊராட்சியிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் களுக்கிடையே உள்ள கல்வி நிலைப்பற்றிய மதிப்பீட்டு அறிக்கைகளைத் திரட்டி அவற்றை ஒருங்கிணைத்து மாவட்ட ஊராட்சிக்கு அனுப்பி வைத்தல். |
| | (ii) குறித்த காலத்தில் பாடநூல்கள், சீருடைகள், படிப்பு உதவித்தொகை வழங்குதல், மாணவர்கள், தலைமை யாசிரியர்கள் ஆகியோருக்கு ஊக்கத் தொகைகள் வழங்குதல், மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல், மேற்கண்ட ஏற்பாடு செய்தலை மேற்பார்வையிடவும், கண்காணித்தலும் செய்தல். |
| | (iii) மாணவர்களின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு, அவர்களுடைய கல்வித் தரத்தை மேம்படுத்துதல், அனைத்து நிலைகளிலும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதலைக் கண்காணித்தல். |
| | (iv) பள்ளிகள், உள்ளுறை பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றிற்கு அடிப்படைச் சாதனங்களையும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிப்பதைக் கண் காணித்தலும் மேற்பார்வையிடுதலும். |
| | (V) காலமுறைப்படி மறுஆய்வுக் கூட்டங்களை நடத்தி, இடைவெளியைக் கண்டறிந்து சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை தெரிவித்தல். |
| 2. விட்டு வசதிகள் மற்றும் வீட்டு மனைகளுக்கு நிலத்தைக் கையகப்படுத்துதல் | (i) அரசு நடத்தப்பெறும் /ஊக்குதவித் தொகை வழங்கும் / ஆதரவு திட்டங் களின் கீழ் வீடுகளைக் கட்டும்பணியை மேற்கொள்ளுதல். |
| | (ii) வீட்டுமனைகள் வழங்கல், வசதி மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை அளிக்க பல்வேறு துறைகளால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சீராய்வு செய்து ஒருங்கிணைத்தல். |
| 3. பொருளாதார வளர்ச்சி | (i) பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவித்தொகை மற்றும் கடன் வசதிகளுக்கு வழிவகை செய்வதை உறுதி |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | | செய்வதுடன் அவற்றை மேற்பார்வையிடுதல்,சுயவேலை வாய்ப்பிற்கு வட்டார / ஒருங்கிணைந்த பழங்குடியினர் திட்ட அளவில் உதவி செய்தல். |
| | (ii) | குடும்ப அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கும் உள்ளமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்குமாக பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல். |
| | (iii) | சுயவேலை வாய்ப்பு, கூலி அடிப்படையிலான வேலைவாய்ப்பு, ஊரக துப்புரவுத் திட்டங்கள் முதலியவற்றிற்கும் நிதியைப் பயன்படுத்துவதற்கும் தா.வ./தா.ப. உறுப்பினர்களுக்கான திட்டச் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல். |
| | (iv) | காலமுறைப்படி சீராய்வுக் கூட்டங்களை, நடத்தி குறைகளைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளுதல். |
| 4. பயிற்சியும் மற்றும் வேலைவாய்ப்பும் | (i) | வட்டார நிலையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பயிற்சி திட்டங்களுக்கும், சிறப்புப் பயிற்சிகளுக்கும் உதவுதல். |
| | (ii) | பயிற்சித் திட்டங்களின் செயல்விளைவுகளை மதிப்பீடு செய்ய காலமுறைப் படி சீராய்வுக் கூட்டங்களை நடத்துதல். |
| 5. தீண்டாமையை ஒழித்தல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எதிரான அட்டூழியங்களை அடக்குதல் | (i) | 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் குறித்த விழிப்புணர்ச்சி முகாம்களை அமைத்தல். |
| | (ii) | ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ஆம் நாள் 'தீண்டாமை ஒழிப்பு வாரம்' கொண்டாடுவதை உறுதி செய்தல். |
| | (iii) | துயருற்றவர்களுக்குச் சட்ட உதவி கிடைக்க உதவி செய்தல். |
| | (iv) | 1989ஆம் ஆண்டு பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டத்திற்குப் பரவலான விளம்பரம் அளிக்க ஏற்பாடு செய்தல். |
| 6. கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு | (i) | ஊராட்சியிலிருந்து கொத்தடிமைத் தொழிலாளர் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையைத் திரட்டி, ஒருங்கிணைத்து, மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல். |
| | (ii) | 1976ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின்படி மறுவாழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் ஊராட்சிக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்தல். |

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 7. | துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ள வர்களுக்கான மறுவாழ்வு | (i) | கிராம நிலையில் மறுவாழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப் படுவதை மேற்பார்வை யிடுதல் மற்றும் கண்காணித்தல். |
| | | (ii) | துப்புரவாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் தடையின்றி ஆதாயங்கள் கிடைக்கப் பெறுவதை மதிப்பிட மறுஆய்வுக் கூட்டங்களை நடத்துதல். |

## III. மாவட்ட ஊராட்சி

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்கு திட்டமிடல் | (i) | ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோருக்குத் தொடர்புள்ள ஆவன விவரங்கள், மதிப்பீடுகள், புலனாய்வு, அறிக்கைகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து திரட்டுவதுடன், ஆண்டறிக்கையையும் தயாரித்தல். |
| | | (ii) | ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமை தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோரின் நலனிற்கு ஆண்டு தகுதி நிலை அறிக்கையைத் தயாரித்தல். |
| | | (iii) | ஊராட்சி / ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றிற்கு திட்டம் / தொழில்நுட்பம் தொடர்பான வழிக்காட்டுதல்களை அளித்தல். |
| | | (iv) | ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள், துப்புரவாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் பணிகள் மீதான ஆய்விற்காகவும் சமுதாய நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களிடமிருந்து கருத்துக்களையும் உதவிகளையும் பெறுவதற்காக வேண்டிக் கேட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| | | (v) | ஆதி திராவிடர், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான மேலாண்மைத் தகவல் அமைப்பு முறையை மாவட்ட அளவிலான அடிப்படை விவரங்களின் பேரில் உருவாக்குதலும் அதனை மேம்படுத்துதலும். |
| 2. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாடு | (i) | ஆதி திராவிடர், பழங்குடியினரின் கல்வித் தகுதிநிலைப் பற்றிய ஆண்டறிக்கைகளைத் தயாரித்தல். |
| | | (ii) | ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான கல்வி வசதிகளுக்கு வழிவகை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்தல். |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | (iii) | காலமுறைப்படி சீராய்வுக் கூட்டங்களை நடத்தி இடைவெளியைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| 3. வீட்டுவசதிகள் மற்றும் வீட்டுமனைகளுக்கு நிலத்தைக் கையகப்படுத்துதல் | (i) | ஆதி திராவிடர், பழங்குடியினருக்கும் வீடு மற்றும் வீட்டுமனை வசதிகள் அளிக்கப்பெறுவதையும், அவர்கள் குடியிருப்பிட மிடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருவதையும் கண்காணித்தல். |
| | (ii) | வசதிகளையும் சாதனங்களையும் அளிப்பதில் பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதைக் கண்காணித்தல். |
| 4. பொருளாதார வளர்ச்சி | (i) | ஆதி திராவிடர், பழங்குடியினர், நாகரிகம் குறைந்த பழங்குடிகள் ஆகியோருக்கான பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் ஆகியன அளிக்கப் பெறுவதைக் கண்காணித்தல்/மற்றும் செயலுரிமை வரையறுப்பதற்கான ஏற்பாடுகளுக்கு உதவி செய்தல். |
| | (ii) | மேம்பாட்டுப் பிரிவுகளின் வகுத்தமைக்கக்கூடிய அனைத் –திற்குமான சிறப்பு கூறுகளடங்கிய திட்டத்தைச் செயற்படுத்துவதைக் கண்காணித்தல். |
| | (iii) | காலமுறைப்படி சீராய்வு கூட்டங்களைக் கூட்டிக் குறைகளைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| 5. பயிற்சியும் மற்றும் வேலைவாய்ப்பும் | (i) | பயிற்சித் திட்டங்கள், சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றைச் செயற்படுத்துவதைக் கண்காணித்தல். |
| 6. தீண்டாமையை ஒழித்தல் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எதிரான அட்டூழியங்களை அடக்குதல். | (i) | ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு எதிரான தீண்டாமையை அழித்தல், அட்டூழி யங்களை அடக்குதல் ஆகியவை தொடர்பில் ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் நடவடிக்கை –களைக் கண்காணித்தல். |
| | (ii) | மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து சீராய்வுக் கூட்டங்களை கூட்டி சரி செய்வதற்கான நடவடிக்கைக்குக் கருத்துக் கூறுதல். |
| 7. கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்வு | (i) | ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்று ஒருங்கிணைத்து அரசுக்கு அனுப்பி வைத்தல். |
| | (ii) | **1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின்படி மறுவாழ்வு நடவடிக்கைகளைச் செயற்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதுடன் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி செய்தல்.** |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | (iii) | சீராய்வுக் கூட்டங்களை நடத்தி இடைவெளியைக் கண்டறிந்து சரிசெய்யும் நடவடிக்கை குறித்து ஆலோசனை கூறுதல். |
| 8. துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர் களுக்கான மறுவாழ்வு | (i) | ஊராட்சி ஒன்றிய நிலையில் துப்புரவாளர்கள் நலம் மற்றும் மறுவாழ்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணித்தல். |

## நிருவாகம், நிதி மற்றும் சட்டச் சிக்கல்கள்

11. தற்பொழுது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் திட்டங்களை, மாவட்ட நிலையில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் செயற்படுத்தி வருகின்றனர். மாநில நிலையில் தனி இயக்ககமும் மற்றும் கழகமும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நல சமூகப் பொருளாதார வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை மேற்கொள்கின்றன. மாநில அளவிலான அமைப்பானது அதாவது இயக்ககமும், கழகமும் சேர்ந்து ஊரகப்பகுதிகளிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் தேவைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டுவனவாகும். ஊராட்சி அமைப்புகளானது திட்டங்களைச் செயற்படுத்தும் பொழுது தொழில்நுட்ப உதவிகளை இயக்ககத்தாலும், நிதியுதவி கழகத்தாலும் அளிக்கப்பெறவேண்டும். இருந்தபோதிலும், எந்தவொரு காரணத்திற்காக வேனும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்களை மாவட்டத்தில் நிருவாகத்துறையால் அல்லது கழகத்தால் மாநில அளவில் செயற்படுத்தப்படுவதற்காகத் தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருந்தால் இத்திட்டங்கள் பற்றிய முழு விவரங்களும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் அளிக்கப்பெறவேண்டும். மேலும் **1994** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு **114 (2)** இன் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் இத்திட்டங்களை கால முறைப்படி சீராய்வு செய்வதற்கான அதிகாரங்களைப் பெற்றிருக்கவும் வேண்டும். ஆண்டு முழுவதும் அமைதியும் நல்லிணக்கமும் இருந்து வரும் இத்தகைய ஊராட்சிகளுக்கு கூடுதல் வளர்ச்சி உதவி என்ற வகையில் ஆண்டு ஊக்க உதவித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படலாம். **1989** ஆம் ஆண்டு பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் வேண்டப்படும் தேவையின்றி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான அட்டூழியங்கள் நடைபெறாமலும் வேறுபாடு காட்டப்படாமலும் இருக்குமிடத்தும் இத்தகைய ஆண்டு ஊக்குதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்படலாம்.

12. இவைகளை செயற்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட்ட வேண்டுவதுடன், தொடர்புள்ள சமூகங்களின் நம்பிக்கையை உயர்த்துவதற்காக சிறப்புக்கூறு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித்திட்டம் ஆகியவைகளின் ஒதுக்கீடுகளை குறிப்பிட்டு வைத்திருக்கப்படவேண்டும். அவ்வொதுக்கீட்டை சரிக்கட்டுதல் செய்ய வேண்டியிருப்பின் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் ஆகிய சமூக சார்பாளர்களின் இசைவுடன் செய்யப்பட வேண்டும்.

13. ஒன்பதாவது திட்டம் முடிவுறும் முன்னர் இந்த பொருள் பற்றி அரசு மறு ஆய்வு செய்ய வேண்டும்.